பட்டு, உலகம் தெரிந்து கொண்ட பிறகு, அவர் மேல் நடவடிக்கை எடுத்தால் எடுத்த நடவடிக்கை நியாயம் நிச்சயமாக மக்களுக்குத் தெரியும் என்ற காரணத்தால் பொறுத்திருக்கிறோம். கூடிய விரைவில் நடவடிக்கை எடுப் பதுபற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, இது போன்று உடனுக்குடன் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஒவ்வொரு அதிகாரியும் அரசாங்கத்தை மீறக்கூடிய செயல் ஏற்படும். அதிகாரிகளுக்கு பயம் இல்லாமல் போய் விடும். ஆகவே என்னைப் பொறுத்தவரை யாராக இருந்தாலும் அரசாங்க விதிகளைப் பின்பற்ற வேண்டும். கவர்ன்மெண்ட் காண்டக்ட் ரூல்ஸ்-படி நீங்கள் இனிமேல் அதிகாரிகளை நிர் வகிக்கப் போகிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். இதில் அரசியல் தேவை கிடையாது அரசாங்க அதிகாரிக்கு. நாளைக்கு இன்னொரு அதிகாரி எனக்கு ஆலோச கராக வருவார்; அவர் ஆலோசனை சொல்வார்; அவர் பத்திரிகைக்கு பேட்டி கொடுப்பார். தாங்கிக் கொள்வீர் களா?

(ஆ) சென்னை திரிசூலத்திற்குப் பக்கத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவரவர் களே, என்னுடைய பூங்கா நகர் தொகுதி புளியந்தோப்பு பகுதியில் காந்தி நகரைச் சார்ந்த 40 பேர் ஒரு டெம்போ வேனிலே திண்டிவனத்திற்கு அருகேயுள்ள ஒரு ஊரில் தங்கள் உறவினர் ஒருவரின் மரண இறுதிச் சடங்கிலே கலந்து கொள் வதற்காகச் சென்றபொழுது, விமான நிலையத்திற்கு அருகில், திரிசூலத்திற்குப் பக்கத்திலே விபத்து ஏற்பட்டு ஆறு பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். 31 பேர் சென்னை மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விபத்திலே இறந்த ஆறு பேரும் கூலித் தொழிலாளிகள். இவர் களில் சிலர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சார்ந்தவர்கள். ஆனால் ஏழைத் தொழி லாளிகள், ஆதி திராவிட மக்கள். இவர்களை நம்பியே அந்தக் குடும்பங்கள் இருக்கின்றன, எனவே, கட்சி வேறுபாடு களுக்கு அப்பால் மனிதாபிமானத்தின் அடிப்படையில் கருணையே உருவான நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளிக்க அன்புடன் வேண்டுகிறேன் தங்கள் மூலமாக.

1989 ஏப்ரல் 4]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விபத்துகளில் இறப்பவர்களுக்குக் குடும்பப் பாதுகாப்பு நிதி தரப்படுவது ஏற்கெனவே இந்த அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் தொழிலாளிகள் விபத்துஒன்றில். இறந்திருக்கிறார்கள் எனவே, மாண்புமிகு உறுப்பினர் இரகுமான் கானுடைய இந்த முறையீடு பரிவோடு பரிசீலிக்கப்படும்.

(இ) சென்னையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் ஆந்திரப் பகுதியிலிருந்து திரும்பு வதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

*திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, 25 ஆம தேதி ஆந்திரா மாநில நெல்லூர் மாவட்டக் கடற்கரைப் பகுதியிலே மீன் பிடிக்கச் சென்ற 16 மீனவர்களை மீட்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வரவர்கள் எடுத்ததாக இங்கே அறிவித்தார்கள். ஆனால் அதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால், இங்கேயிருந்து வரதன் என்ற Ass stant Direcor of Fisher es-ஐயும் பழனி என்ற Inspector cf Pol ce-ஐயும் தமிழக அரசு ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பியது. ஆனால், அந்த எஸ்.பி. அவர்கள் இதைப் பேசித்தான் முடிக்க வேண்டும் எனறு சொன்னாரேதவிர, பிடித்த அந்த ரௌடிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், 17,000 ரூபாயை நம்முடைய அப்பாவி மீனவர்களிடம் வாங்கிக் கொண்டுதான் விட்டிருக்கிறார்கள். இப்பொழுதுகூட மீன் பிடிக்கப் போக முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நெல்லூர் மாவட்ட எஸ். பி. அவர்கள் சொல்வது, நீங்கள் தமிழக முதல்வர் மூலமாக ஆந்திர முதல்வரவர்களைச் சந்தித்து அல்லது எழுத்து மூலமாகத் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினை முடிவாகவில்லை என்றால் இங்கு ஒன்றும் செய்ய முடியாது என்று அங்கிருக்கின்ற அதிகாரிகள் சொல்கிறார்கள். நம்முடைய அதிகாரிகளுக்கும் சரியான முறையிலே மரியாதை கொடுக்கப்படவில்லை. அந்த எஸ். பி. அவர்கள் அங்கே பார்த்துப் பேசி முடியுங்கள் என்று சொல்லிவிட்டு அதில் எந்த பிரச்சினையையும் செய்யாமல், 17,000 ரூபாயை இலஞ்சமாகக் கொடுத்ததற்குப் பின்னால்தான் விட்டிருக்கிறார்கள். ஆகையால் தங்கள் மூலமாக மாண்புமிகு முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்வது, முதல்வர் நல்லதொரு நடவடிக்கை எடுத்தார்கள். ஒரு தடவை அங்கே இருக்கின்ற உங்களுடைய இனிய நண்பருக்குத் தொலை பேசி மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ பேசி நம்முடைய மீனவர்கள் அந்தப் பகுதியிலே மீன் பிடிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உறுப்பினர் திடீரென்று தருகின்ற புதிய தகவல்கள். பற்றி விசாரித்து ஆவன செய்யலாம்.